# PUBLIC NOTICE

Public Hearing on the Tariff Petition filed by
Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO),
Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and
State Load Despatch Centre (SLDC)

1. The Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) has filed a Petition before the Tamil Nadu Electricity Regulatory Commission (TNERC) for Final truing up of FY2011-12 to FY2015-16, determination of Aggregate Revenue Requirement (ARR) for FY2016-17 to FY2018-19 and determination of Retail Tariff for FY2017-18 and for determination of Wheeling Charges, Cross Subsidy Surcharges, etc. The current electricity tariff in Tamil Nadu was fixed by TNERC on 11-12-2014 with effect from 12-12-2014. The present Tariff Petition proposes no tariff increase and an adjustment in the subsidy without affecting consumers for the FY2017-18.

2. The Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) has also filed a Petition for Final truing up of FY2011-12 to FY2015-16, determination of Aggregate Revenue Requirement (ARR) for FY2016-17 to FY2018-19 and determination of Transmission Charges for Long Term and Short Term Open Access customers, Scheduling and System Operation Charges and Reactive Energy Charges for FY2017-18 in compliance with the provisions of the Electricity Act, 2003 before the TNERC. They have not proposed any increase in the Transmission Charges payable by LTOA and STOA customers.

3. The State Load Despatch Centre (SLDC) has also filed a Petition for determination of the ARR for FY2017-18 and FY2018-19.

4. The petitions of TANGEDCO and TANTRANSCO were admitted by the Commission on 31-01-2017 in M.P. No.2 of 2017 and T.P. No. 1 of 2017 and M.P. No. 3 of 2017 and T.P. No. 2 of 2017 respectively. The petition of SLDC was admitted by the Commission on 13-06-2017 and registered as T.P. No. 3 of 2017. The copies of the filings were made available to the public at the offices of Chief Financial Controller/Regulatory Cell of TANGEDCO and TANTRANSCO and were also hosted in the website of the Commission, www.tnerc.gov.in, website of TANGEDCO www.tangedco.gov.in, website of TANTRANSCO www.tantransco.gov.in and website of SLDC www.tnebldc.org for inviting objections/comments on the petitions from the public. The last date for submission of objections/comments before the TNERC expired on 31-03-2017 in respect of the petition filed by TANGEDCO and TANTRANSCO. In respect of the petition filed by SLDC, the last date for submission of objections/comments before TNERC expired on 14-07-2017.

5. In continuation of the above, the Commission hereby announces the programme of Public Hearing as per the schedule below. Those who are interested may make it convenient to appear before the Commission on the following dates at the nearest venue and present their case. Those who register their names at the respective venues between 9.00 A.M. to 10.30 A.M. of the hearing dates would be allowed to present their case.

| Date and Day | Place | Venue | Time |
|---|---|---|---|
| 25.07.2017 (Tuesday) | Chennai | Vani Mahal,<br>103 G.N. Chetty Street,<br>T. Nagar, Chennai 600 017. | From 10.00 AM |
| 28.07.2017 (Friday) | Madurai | Tamil Nadu Chamber of Commerce and Industry,<br>178-B Kamarajar Salai,<br>Madurai 625 009. | From 10.00 AM |
| 02.08.2017 (Wednesday) | Coimbatore | S.N.R. College Auditorium,<br>Nava India Bus Stop,<br>Avinashi Road,<br>Coimbatore 641 006. | From 10.00 AM |

Secretary
Tamil Nadu Electricity Regulatory Commission

# பொது அறிவிப்பு

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட் (TANGEDCO) தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் லிமிடெட் (TANTRANSCO) மற்றும் மாநில மின்சுமை பகுப்பு மையம் (SLDC) தாக்கல் செய்துள்ள மின்கட்டண மனுக்கள் மீது பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம்**

1. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட் (TANGEDCO) 2011–12 முதல் 2015–16 வரையிலான நிதியாண்டுகளுக்கான இறுதியான உண்மை நிலையை கண்டறிவதற்கும், 2016–17 முதல் 2018–19 வரையிலான நிதியாண்டுகளுக்கான மொத்த வருவாய்த் தேவை ஒப்புதலுக்கும் மற்றும் 2017–18 ஆம் நிதியாண்டிற்கான சில்லறை மின்கட்டணம் நிர்ணயம் செய்வதற்கும் மற்றும் மின்சாரம் கொண்டு செல்வதற்கான கட்டணம், குறுக்கு மானிய மிகைக்கட்டணங்கள், முதலியன நிர்ணயம் செய்வதற்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனு தாக்கல் செய்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள மின் கட்டணவீதம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் 11–12–2014 அன்று நிர்ணயம் செய்யப்பட்டு 12–12–2014 முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய மின்கட்டண மனு மின்கட்டணவீத உயர்வு இன்றியும், 2017–18 ஆம் நிதியாண்டில் மின் நுகர்வோர்களைப் பாதிக்காவண்ணம் அரசு மானியத்தை சரிக்கட்டுவதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் லிமிடெட்டும் (TANTRANSCO) 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்திற்கிணங்க, 2011–12 முதல் 2015–16 வரையிலான நிதியாண்டுகளுக்கான இறுதியான உண்மை நிலையைக் கண்டறிவதற்கும் 2016–17 முதல் 2018–19 வரையிலான நிதியாண்டுகளுக்கான மொத்த வருவாய்த்தேவை ஒப்புதலுக்கும் மற்றும் நீண்டகால மற்றும் குறுகியகால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களுக்கான மின்செலுத்தல் கட்டணங்கள் நிர்ணயம் செய்வதற்கும், மின் அனுப்புகை திட்டமிடல் மற்றும் மின் அமைப்புமுறை இயக்கக்கட்டணம் மற்றும் எதிர்வினை மின் கட்டணங்கள் நிர்ணயம் செய்வதற்கும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனு தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் நீண்டகால மற்றும் குறுகியகால திறந்த நுழைவுரிமை வாடிக்கையாளர்களால் செலுத்தப்படவேண்டிய மின்செலுத்தல் கட்டணங்களின் மீது எந்த வித உயர்வும் கோரவில்லை.

3. மாநில மின்சுமைப் பகுப்பு மையமும் (SLDC) 2017–18 மற்றும் 2018–19 ஆம் நிதியாண்டுகளுக்கான மொத்த வருவாய்த்தேவை ஒப்புதலுக்கான மனுவினைத் தாக்கல் செய்துள்ளது.

4. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவை தாக்கல் செய்த மனுக்கள் முறையே பலவகை மனு எண்.2/2017 மற்றும் மின்கட்டண மனு எண். 1/2017 மற்றும் பலவகை மனு எண்.3/2017 மற்றும் மின்கட்டண மனு எண்.2/2017 இல் 31.01.2017 அன்று ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மாநில மின்சுமைப் பகுப்பு மையத்தின் மனு ஆணையத்தால் 13.06.2017 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு மின்கட்டண மனு எண்.3/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து இந்த மனுக்களின் மீதான ஆட்சேபனைகள்/கருத்துரைகள் கோருவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின்

நகல்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் (ஒழுங்குமுறைப் பிரிவு) அலுவலகத்திலும் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழக அலுவலகத்திலும் பொது மக்களுக்கு கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு மேலும் அவை ஆணையத்தின் இணையதளம் www.tnerc.tn.nic.in, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணையதளம் www.tangedco.gov.in, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இணையதளம் www.tantransco.gov.in மற்றும் மாநில மின்சுமைப் பகுப்பு மையத்தின் இணையதளம் www.tnebldc.org ஆகியவற்றிலும் வெளியிடப்பட்டன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் மீதான ஆட்சேபனைகள்/கருத்துரைகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன் அளிப்பதற்கான காலக்கெடு 2017 ஆம் ஆண்டு மார்ச் 31–ஆம் நாளுடன் முடிந்துவிட்டது. மாநில மின்சுமைப் பகுப்பு மையத்தைப் பொருத்த வரையில் ஆட்சேபனைகள்/கருத்துரைகள் அளிப்பதற்கான கடைசி தேதி 2017 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் நாள் அன்று முடிவடைந்தது.

5. இதன் தொடர்ச்சியாக ஆணையம், கீழ்க்கண்ட அட்டவணையின்படி பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கான செயல்முறைத் திட்டத்தை அறிவிக்கிறது. விருப்பமுள்ளவர்கள் தங்களுக்கு அருகிலுள்ள இடத்தில் பின்வரும் நாட்களில் ஆணையத்தின் முன் ஆஜராகி தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறும் நாட்களில் அந்தந்த இடங்களில் காலை 9.00 மணி முதல் காலை 10.30 மணி வரை தங்களுடைய பெயர்களை பதிவு செய்பவர்கள் கூட்டத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

| தேதி மற்றும் நாள் | இடம் | நிகழ்விடம் | நேரம் |
|---|---|---|---|
| 25.07.2017 (செவ்வாய்க் கிழமை) | சென்னை | வாணி மகால்,<br>103 ஜி.என். செட்டி தெரு, தி.நகர்,<br>சென்னை 600 017 | முற்பகல் 10.00 மணி முதல் |
| 28.07.2017 (வெள்ளிக் கிழமை) | மதுரை | தமிழ்நாடு வணிக மற்றும் தொழில் கழகம்,<br>178–பி, காமராஜர் சாலை,<br>மதுரை 625 009. | முற்பகல் 10.00 மணி முதல் |
| 02.08.2017 (புதன் கிழமை) | கோயம்புத்தூர் | எஸ்.என்.ஆர். கல்லூரி கலையரங்கம்,<br>நவ இந்தியா பேருந்து நிறுத்தம்,<br>அவிநாசி சாலை,<br>கோயம்புத்தூர் 641 006 | முற்பகல் 10.00 மணி முதல் |

செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்